பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.,

மலர்: 20] சென்னை: ஐப்பசி 12 (28—10—72) சனி — வெளியூர்: ஐப்பசி 13 (29—10—72) ஞாயிறு [இதழ்: 112

ஆற்று நீர் பங்கீடு

மத்திய மசோதா பரிசீலனை

புதுடில்லி, அக். 28—

நாட்டின் ஆற்று நீர் வசதிகளை மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவர வகை செய்யும் நகல் சட்டம் பற்றி, சட்டத் துறையுடன் மத்திய நீர்ப்பாசனத் துறை ஆலோசனை மேற்கொண்டிருக்கிறது.

நாடு முழுவதன் நன்மைக்காகத் தண்ணீர் வசதிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மாநிலங்க

(4-ம் பக்கம் பார்க்க)

அறிஞர் அண்ணா தந்த அறிவுரை

அருமைமிகு அமைப்புக்கு நாம் உரிமையாளர்கள் -- 'அரும் பணியாற்றுவோர்' எனும் புகழாரம் கொண்டவர்கள் -- மனம்போன போக்கில் மற்றவர் பேசுவதால் மனம் பதறுதீர் -- தூய தொண்டுக்கு அது அடையாளமன்று -- கண்ணியத்துடன் காரியமாற்றிக் கழகத்தை வளர்ப்பீர்

'சபல'த்தை ஏற்படுத்தியவர் சஞ்சலம்

எரிச்சல்-ஏமாற்றம் அடைவது இயல்பு

சிறுமைச் செயல்களில் ஈடுபடுவது கேலிக்கூத்து

பழைய குப்பைகளின் மறுபதிப்பு எழில் வடிவம் பெற்றிருக்கிறது

"கட்டுப்பாடான முறையில் மாற்றாரின் சில இதழ்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மாசு கற்பிக்க முற்பட்டிருக்கும் வேளை இது, இந்த நிலை உணர்ந்து பொறுப்புமிக்கவர்கள் -- கழகப் பணிகளில் -- முன்பு காணப்பட்டதைவிடக் கண்ணியம் பளிச்செனத் தெரியச் செய்யவேண்டும்; கழகம் கட்டளையிடுகிறது -- கண்ணியம் காத்திடுவீர்!

" தூற்றித் திரிவதை -- தொல்லைகள் தருவதை -- திரித்துக் கூறுவதை -- இழிமொழியால் ஏசுவதை நமது மாற்றார்கள் ஏகபோக உரிமையாகக் கொள்ளட்டும்!

" தாங்கிக்கொள்வது -- தளராது இருப்பது -- கலாம் தவிர்ப்பது -- கண்ணியம் காப்பது -- இவை நமக்கு உரியனவாக என்றென்றும் இருக்கட்டும்!

" இம்முறைதான் நன்னெறி -- என்னெறி; இம்முறைதான் கழகத்துக்கு வெற்றி தரும்!

" இம்முறை நடப்போரே, 'கழகத்தவர்' எனும் பெயருக்கு உரியவர், இந்த உரிமை பெற்றவரே என் தம்பியும் ஆவர்"

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், 21—5—61-ல், 'உன்னைத்தான் தம்பி' என்ற தலைப்பில் விடுத்த வேண்டுகோள் ஒன்றில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்; அவ்வேண்டுகோளின் விவரம் இங்கு தரப்படுகிறது:—

" நமது கழகத்தில் ஏற்பட்டுவிட்ட கசப்புணர்ச்சி எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கத்தக்க விதமாகப் 'பிளவு' எனும் வடிவமெடுத்து -- எழிலுடனும் ஏற்றத்துடனும் வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றாரின் ஏச்சுப் பேச்சுக்கு ஆளாகவேண்டிய நிலையை உண்டாக்கிற்று!

கழகத்தின் கொள்கை -- தலைமை ஆகியவற்றில் நம்பிக்கைகொண்டு ஆர்வத்துடனும் -- தன்னல மறுப்புடனும் பணியாற்றுவோர் இலட்சக்கணக்கில் உள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏற்பட்ட கசப்புணர்ச்சி, 'பிளவு' எனும் வடிவம் கொண்டது கண்ட பொது மக்களில் மிகப் பெரும்பாலோர் இந்நிலை குறித்து வருத்தப்படுவதுடன், முன்னிலும் அதிகமான ஆர்வத்துடனும் -- அளவிலும் ஆதரவு நல்கி, கழகத்தை மேலும் செம்மையுள்ள நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உறுதி காட்டி வருகின்றனர்.

பிளவு ஏற்பட்டதைப் புதிய கட்சியாக்கிக் கொண்டவர்கள், தமது போக்கு கழகத்தவரில் மிக மிகக் குறைவான எண்ணிக்கை கொண்டவர்களிடை மட்டுமே சபலத்தை ஏற்படுத்த முடிந்தது என்பதை உணர்ந்து எரிச்சல் கொள்வதும் -- ஏமாற்றம் அடைவதும் இயல்புதான்!

அதுபோலவே, துவக்கமுதல் இதுநாள் வரையில் -- மாற்றாருக்குத் துளியும் இடந்தராத முறையில் -- கட்டுக்கோப்பாக இருந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே வெடிப்புப் பிளவும் ஏற்பட இடம் கொடுத்துவிட்டார்களே என்பதால் அப்படிப்பட்டவர்கள்மீது அருவருப்பும் கோபமும், இன்றும் கழகக் கொள்கை -- தலைமை ஆகியவற்றில் நம்பிக்கைகொண்ட இலட்சக்கணக்கானவர்களுக்கு இருந்து வருகிறது.

இந்த இரு உணர்ச்சிகளின் மோதுதல், இன்று, அருவருக்கத்தக்க எவரும் அனுமதிக்க முடியாத -- பொது வாழ்வுத் துறையையே கேவலமாக்கிவிடத்தக்க -- சின்னத்தனமான சம்பவங்களுக்கு இடம் கொடுத்துவிடுவது கண்டு நான் பெரிதும் கலக்கமும் வேதனையும் அடைகிறேன் -- அவமானமும் கொள்கிறேன்.

அவரவர்களுக்கு உள்ள உணர்ச்சிகளுக்கு ஏற்ப, அவர்கள் நம்புகின்ற கொள்கைக்காக ஆர்வத்துடன் தீவிரமாகப் பணியாற்றி, தாம் நம்புகின்ற -- ஈடுபட்டிருக்கின்ற அமைப்பைத்தான் உலகம் மதிக்கிறது என்பதை நிலை நாட்ட வேண்டுமேயன்றி, தமக்கு இருக்கின்ற நம்பிக்கையை ஏற்க மறுக்கும் சிலரை ஏசுவதும் -- தகாத முறைகளில் வெறுப்பு உணர்ச்சிகளைக் காட்டுவதும் என்னால் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

கலாம் விளைவித்தல் -- கல் வீசுதல் -- கூட்டத்தில் குழப்பம், காலணி வீசுதல் போன்ற காட்டுமிராண்டித்தனம், நாம் துவக்க முதற்கொண்டுள்ள தூய்மையான கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு ஆகியவைகளைக் கேலிக்கூத்து ஆக்கிவிடும் சிறுமைச் செயல்களாகும்.

தனித்தனியாகச் சம்பவங்களை எடுத்து ஆராய்ந்து பார்த்துப் பேச முற்படவில்லை; பொதுவாக இந்த நிலைமை எத்தனை கேவலமானது என்பதையும், இதன் காரணமாக நமது கழகத்தின் மாண்பு எந்த அளவுக்குக் கெட்டுவிடும் என்பதையும் எடுத்துக்காட்டி, இனி எவரும் இத்தகைய இழிசெயலுக்கு இடமளித்து, 'என் இதயத்தில் ஈட்டி எறியாதீர்கள்' என்று இறைஞ்சிக் கேட்டுக்கொள்ளவே இதனை எழுதுகிறேன்.

மனம்போன போக்கிலே மற்றவர்கள் பேசவும் -- எழுதவும், அதனைக் கண்டு மனம் பதறாமல் பணியாற்றிவருவதுமே தூய தொண்டுக்கு அடையாளம்!

கோபத்தால் கொந்தளிப்பது -- கசப்பு உணர்ச்சியால் கல்வீசுவது என்பவைகளில் எவர் ஈடுபடினும், அவர்கள் தம்மையும் அறியாமல் --

(4-ம் பக்கம் பார்க்க)

'அபாண்டமான பழி'

'சட்டப்படி நடவடிக்கை'

அவதூறுக்குக் கலைஞர் மறுப்பு

சென்னை, அக். 28—

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டார்; அதில் அவர் கூறியிருப்பதாவது:—

" 27—10—72-ம் நாள் மாலை சென்னையில் வெளிவந்த 'நவமணி' 'தென்னகம்' ஆகிய ஏடுகளில், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் அளித்த பேட்டி வந்திருக்கிறது; அதில் அவர், தன் அண்ணன் சக்ரபாணி அவர்களுக்கு வந்ததாக ஒரு கடிதத்தைப் படித்துக்காட்டி, தன்னைக் கைது செய்ய நான் பயங்கரமான ஒரு சதித் திட்டம் வகுத்திருப்பதாகவும் -- அதை அவரும் நம்புவது போலவும் ஒரு அபாண்டமான பழியை என்மீது சுமத்துகின்ற அளவுக்குச் செய்தி கொடுத்துள்ளார்.

அந்த அவதூறை நான் அறவே மறுப்பதோடு -- அதுபற்றிச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இதுவரை கலைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். மன்றங்கள்

4,752

இன்னும் பல இடங்களில் கலைக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் குவிகின்றன.

மதுராந்தகம் நகராட்சியாகிறது

சென்னை, அக். 28—

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மதுராந்தகம் இப்போது பேரூராட்சியாக இருக்கிறது; அதை நகராட்சியாக மாற்றுவதென்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தற்போதைய [illegible] மதுராந்தகம், கருங்குழி [illegible] பேரூராட்சிகளை இணைத்து [illegible] மதுராந்தகம் நகராட்சி [illegible] அமைக்கப்படும்.

" இதற்கு [illegible] மறுப்புத் தெரிவிப்பதாக இருந்தால், இன்னும் 6 வார காலத்திற்குள் தெரிவிக்க வேண்டும்" என்று ஆளுநர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

நில நீர் ஆய்வுக் கருத்தரங்கு

சென்னை, அக். 28—

பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை வெளியே கொண்டுவந்து விவசாயத்துக்குப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய நில நீர் ஆய்வுக் கருத்தரங்கு சென்னையில் நேற்று தொடங்கியது.

இக்கருத்தரங்கை, கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் துவக்கிவைத்தார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இக்கருத்தரங்கில், நேற்று பம்பாயிலுள்ள விவசாய நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் பி. எஸ். ஆப்தே பேசினார்.

பூமிக்கு அடியிலுள்ள நீர் வளம் பற்றிய விவரங்கள் கொண்ட தொழில் நுட்ப மலரை, அமைச்சர் சி. பா. ஆதித்தனார் வெளியிட்டார்.

முதல் பிரதியைத் தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினரும் -- நிர்வாகச் சீர்திருத்தக் குழு உறுப்பினருமான ஏ. ஆர். சுப்பையா பெற்றுக்கொண்டார்.

கருத்தரங்குக்கு வந்திருந்தவர்களை பஞ்சநதம் வரவேற்றார்; சோமநாதன் நன்றி கூறினார்.

நெசவாளர் துயர் துடைத்திட கைத்தறித் துணி வாங்குவீர்!

வரலாற்றுத் திருப்புமுனையில் நின்று கொண்டிருக்கிறோம்

ஆட்சியை இழக்கத் தயாரானாலும் ஒன்றுபட்ட உணர்வை இழக்கமாட்டோம்

டெல்லியி[illegible] நாம் கணக்குக் கேட்கும் நேரத்தில் நம்மிடமே கணக்குக் கேட்கச் சிலர் தூண்டப்படுகின்றனர்

சீறிவரும் வேங்கைமீது வேல் எறியும் வேளையில் காலைக் கொத்தவரும் பாம்பாகப் பலர் உரு மாறுகின்றனர் — அமைச்சர் இராமச்சந்திரன் இலட்சிய முழக்கம்

சேலம், அக். 28

"நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு நாம் ஆளாவதிலே அர்த்தமே கிடையாது! நம்முடைய உணர்ச்சிகளுக்கு நம்மை அடிமைப்படுத்திக் கொள்வதிலே பொருளில்லை!

"கூடவே இருந்து பணியாற்றிய தோழர்கள் — நன்றாக இருந்த தோழர்கள் — ஏதோ திக்குமுக்காடி திசை மாறுகிறார்களே என்று வருத்தப்படுகின்ற நேரத்திலேகூட பேரறிஞர் அண்ணா அவர்கள். ஏற்கனவே ஒரு பிளவை இந்த இயக்கத்திலே சமாளித்துச் சென்றிருப்பது நமக்கு வழிகாட்டுவதற்காகும்!

"கட்சியினாலே என்ன ஆதாயம் கிடைக்குமென்று இருப்போமேயானால் கட்சியை வாழ வைக்க முடியாது; 'கட்சியினாலே எனக்கென்ன நன்மை' என்று பார்ப்பதைவிட, 'என்னாலே கட்சிக்கு என்ன நன்மை' என்பதைத்தான் பார்க்க வேண்டும்' என்று அண்ணா அவர்கள் கற்றுக்கொடுத்தார்கள்! இதற்குத்தானே நாம் இந்தக் கழகத்தில் ஈடுபாடு கொண்டிருக்கிறோம்! இதற்குத்தானே நாம் ஒன்றாக இருந்தோம்?

"பன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டு மக்கள் சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரை — சேலத்திலே இருந்து சிதம்பரம்வரை இன்றையத் தினம் ஒன்றாக இருக்கிறோமே — இந்தக் காட்சியை இதற்கு முன்னாலே தமிழ்நாட்டு வரலாற்றில் கண்டதுண்டா?

"பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னாலே நாலரை கோடி தமிழ்மக்கள் இன்று ஒன்றாக இருக்கிறோமே — ஒரே உணர்வோடு இருக்கின்றோமே!

"மூடநம்பிக்கை கொண்டவர்களாக — ஒருவர் குடிக்கின்ற பாத்திரத்தை இன்னொருவர் தொடாதவர்களாக — ஒருவர் வீட்டிலே இன்னொருவர் சாப்பிட முடியாதவர்களாக இருந்துவந்த நாம், இன்றையத்தினம்தான் ஒன்றுபட்டிருக்கின்றோம்.

"இந்த ஒன்றுபட்ட உணர்வுக்கு வலிவூட்ட வேண்டிய இடத்திலே இருக்கின்ற வழிகாட்டிகள் இன்றையத் தினம் திசை மாறுகின்றார்கள் என்றால், உண்மையிலேயே திகைக்கின்றோம்; ஆனால் அதே நேரத்தில், இந்த ஒற்றுமையை நாங்கள் இழக்கத் தயாராக இல்லை!

"ஆட்சியை இழக்கத் தயாரானாலும், ஒற்றுமையை இழக்க மாட்டோம்! அரசே பறிபோனாலும்சரி — தமிழ்நாட்டு மக்கள் இனி தூங்கமாட்டார்கள் என்பதை மட்டும் இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சிகளுக்கு அல்ல — மத்திய அரசுக்குக்கூடத் தெரிவிக்க விரும்புகிறேன்"

—என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள், சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்! அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அண்ணா அவர்கள் ஏன் நம்மை உருவாக்கினார்கள்? எதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது? எதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களும் — அவரோடு சேர்ந்த தலைவர்களும் 30 ஆண்டுகளாக இரவு பகலாக இந்த நாட்டு மக்களைச் சந்தித்து, இந்த இயக்கத்தினை தொடங்கினார்கள்? ஏன் வளர்த்தார்கள்? எதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பல தடவைகள் சிறையிலே வாடினார்கள்? ஏன்? என்ன காரணம்? என்ன இலட்சியம்? என்ன கொள்கை? அதை நாம் தெரிந்துகொண்டால்தான், யார் எந்தத் திசையிலே போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம புரிந்துகொள்ள முடியும்.

இந்தியாவினுடைய மக்கள் தொகையை எடுத்துக்கொண்டால் மொத்தம் 54 கோடி மக்கள் இருக்கிறார்கள்; அந்த 54 கோடி மக்கள் உள்ள இந்திய அரசியல் அமைப்பில் தமிழ்நாட்டு மக்கள் நாலரை கோடி — நாம் சிறுபான்மையினர்.

எனவே, தென்னாட்டைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காக — தங்களுக்குரிய நியாயங்களைப் பெறுவதற்காக — தங்களுக்கு வரவேண்டிய வருவாயைப் பெறுவதற்காக — தங்களுடைய வாழ்வை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்று அந்தக் காலத்தில், அதாவது விடுதலைப் போராட்டக் காலத்தில் டாக்டர் நாயர் அவர்கள் தோற்றுவித்தார்கள்.

தென்னாட்டு மக்களை எடுத்துக் கொண்டாலும் 14 கோடி மக்கள் இருக்கின்றனர்; நாடாளுமன்றத்திலே பெரும்பான்மை கிடையாது; இந்தியநாட்டை ஆளுகின்ற தலைமையமைச்சராக நாம் என்றைக்கும் வரமுடியாது — எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும் வரமுடியாது.

திறமைக்குப் பெயர்போன இராஜாஜி — தியாகத்திற்குப் பெயர் போன காமராசர் ஆகிய இரண்டு பேரும் இன்றையத்தினம் எங்கே இருக்கிறார்கள்? அவர்களால்கூட அப்பதவிக்கு வரமுடியவில்லை!

எனவேதான், தென்னாட்டு மக்களுக்கு என்று — அவர்களுடைய நலன்களுக்கு என்று பாடுபடுவதற்காக இந்த இயக்கத்தைத் தொடங்கினார்கள் — 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரைச் சூட்டினார்கள்.

இன்னும் சொல்லப்போனால், தந்தை பெரியார் காலத்திலே திராவிடர் கழகம் என்ற பெயரைச் சொன்னவரே பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்; இது, வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும் — கழகத்திலே நீண்டநாள் இருந்தவர்களுக்குப் புரியும். இப்படிப்பட்ட ஒரு இயக்கத்திலே இருந்துவரும் நாம் யாரிடத்திலே கணக்குக் கேட்கவேண்டும் — டெல்லி அரசிடமல்லவா கணக்குக் கேட்கவேண்டும்?

நமக்குள்ளே கணக்குக் கேட்பதற்காக நம்மை அண்ணா அவர்கள் வளர்க்கவில்லை — இந்த இயக்கத்தை உருவாக்கவில்லை! இந்த இயக்கத்தை உருவாக்கிய — இந்தக் கட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றியது — இந்திரா காந்தியாரிடம் கணக்குக் கேட்பதற்குத்தான்.

ஆனால் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்திரா காந்தியிடம் கேட்காமல் கழகத் தோழர்களிடம் கேட்கிறார் என்றால், இதுவா அண்ணாவின் கொள்கை? இதுவா அண்ணாவின் இலட்சியம்?

மத்திய அரசில் எவ்வளவு கோடிக்குத் திட்டம் போடப் போகிறார்கள் தெரியுமா?— ரூ. 51,000 கோடிக்கு! ஒரு கோடி அல்ல — இரண்டு கோடி அல்ல — ரூ. 51,000 கோடிக்குத் திட்டம் போடுகிறார்கள்; அதிலே நாம், நமக்குரிய பங்கைக் கேட்கவேண்டாமா? அதைப் பற்றிக் க[illegible] அ[illegible]கள் சிந்திக்கவேண்டாமா? நம்முடைய கழகத்திலே[illegible]வர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்[illegible]

நாம் போவது புலிவேட்டைக்கு; ஆனால், சீறி வருகின்ற புலியைப் பார்த்து நாம் வேல் எறிகின்ற நேரத்தில் பாம்பு காலிலே கொத்த வருகின்ற நிலைமை இருக்குமானால், அந்தப் பாம்பை அடித்துத் தூக்கி எறிவதுதானே நியாயம்?

இந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆனதைச் செய்துதர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு பேரறிஞர் அண்ணா அவர்களின் பின்னால் நாம் வந்தோம்; அதற்காகத்தான் பாடுபடுகிறோம்.

நாம் கணக்கு கேட்கவேண்டிய இடம் டெல்லி; அங்கே, எங்கே நாம் கணக்கு கேட்டுவிடுவோமோ என்கின்ற அச்சம் சில பலருக்கு வந்திருப்பதனாலே, நம்மைக் காலை வாரிவிடுவதற்கு அவர்கள் தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள்! அதை மறந்துவிடாதீர்கள்!

தென்னாடு முழுவதற்கும் இன்றையத் தினம் தி. மு. கழகம் இல்லையென்றால் கணக்குக் கேட்க நாதி இல்லை; யாராவது இருக்கிறார்களா? மைசூரில் உள்ள இந்திரா காங்கிரசாரால் கேட்க முடியுமா? ஆந்திராவிலே இருக்கிற பிரமானந்த ரெட்டி குழைந்து குழைந்து கேட்டாரே — என்ன ஆனார்? கேரளத்திலே இருக்கிற அச்சுத மேனன் முடியுமா — இண்டிகேட்டினுடைய தயவினாலே ஆட்சி நடத்திக்கொண்டிருப்பவரல்லவா அவர்?

ரூ. 51,000 கோடிக்குத் திட்டம் போட இருக்கிறார்கள்; ஆறாவது நிதிக் குழு அமைத்துப் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மாநிலங்கட்குப் பங்கு போட்டுத் தர இருக்கிறார்கள்; அந்த நேரத்தில் தி. மு. கழக அரசு இருந்தால் — தென்னாட்டு மக்களைத் தூண்டிவிடுவார்களேயானால், தங்கள் விருப்பப்படி உத்தரப் பிரதேசத்துக்கும் — இராசஸ்தானுக்கும் — ஒரிசாவுக்கும் செலவு செய்ய முடியாதே என்ற காரணத்திற்காக — நிலைமைகளைச் சமாளிப்பதற்காக — நம்மைக் கணக்குக் கேட்க ஆள் தேடிக் கொண்டிருந்தார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது;

தெளிவான உண்மை இது; தமிழ்நாட்டிலே — பொதுவாகத் தென்னாட்டு வரலாற்றுத் திருப்புமுனையிலே நாம் நின்று கொண்டிருக்கிறோம் — மறந்துவிடாதீர்கள்!

நாம் கொடுக்கின்ற ஒவ்வொரு சல்லிக் காசுக்கும் டெல்லி கணக்குக் கூறவேண்டிய நேரத்தில் நம்மைப் பார்த்துக் கணக்குக் கேட்பதற்கு ஆட்கள் தூண்டப்படுகிறார்கள்!

இந்தியாவில் அண்ணாவின் கொள்கையை நிறைவேற்ற வேண்டியவர்கள் எங்கே இருக்கவேண்டும்? அண்ணாவின் கோரிக்கைப்படி நடக்கவேண்டுமாயின் இங்கேதான் இருக்கவேண்டும்.

கேரள மாநில முதலமைச்சர் அச்சுதமேனன் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார் — 'திட்டத்திலே ரூ 51,000 கோடி வருகிறது' இதை டெல்லி அரசு தங்கள் விருப்பம் போல் செலவு செய்கிறது; அதை நிதிக் குழுவிலே வைத்துத் தரப்பட வேண்டும்' என்று!

இது புதிதல்ல; பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967—ம் ஆண்டில் தமிழ்நாட்டுச் சட்டமன்ற மேலவையில் வெங்கட்ராமன் அவர்களுக்குப் பதில் சொல்லும்போது, 'திட்டம் என்கின்ற பெயரால் 'ரூர்க்கேலா' என்றும், 'பொக்காரோ' என்றும் இப்படியெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்களை வடநாட்டுக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டுக்கு வருவதில்லை; ஆகவே, இதை நிதிக் குழுவிலே வைத்து — அதற்குப் பிறகு இதைத் திருப்பி எல்லோருக்கும் பங்கு போடவேண்டும்' என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்; 1967—ம் ஆண்டில் அண்ணா சொன்னதை கேரள முதலமைச்சர் — வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அச்சுதமேனன் இப்போது சட்டமன்றத்திலே சொல்லிருக்கிறார்.

அண்ணாவின் கொள்கை எது? 'நான்தான் தி. மு. க,' என்று சொல்வதா? பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான்' என்பதற்கும் — 'நாம்' என்பதற்கும் ஒரு பெரிய கட்டுரையே எழுதினார்; 'நான்' என்று சொல்லுவது அகம்பாவம் — 'நாம்' என்று சொல்லுவது அடக்கம்' என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்கின்ற அமைப்புதான் நமக்குப் பெரியது; 'திராவிட முன்னேற்றக் கழகமா அல்லது தனி மனிதனா' என்பதே கேள்வி.

எவ்வளவுதான் பெரியவர்களாக இருந்தாலும் — எவ்வளவுதான் வேண்டியவர்களாக இருந்தாலும் — எவ்வளவுதான் திறமையாளர்களாக இருந்தாலும் — எவ்வளவுதான் புகழுக்குரியவர்களாக இருந்தாலும், ஓர் இயக்கம் என்று வருகின்றபொழுது, அந்த இயக்கத்திற்குக் கட்டுப்பட்டால்தான் அந்த இயக்கம் நீடிக்கும்; தனி மனிதன் அந்த இயக்கத்திற்குப் பணிந்தால்தான் அந்த இயக்கம் பல நன்மைகளை நாட்டுக்குத் தரமுடியும்.

ஒரு வடநாட்டு ஆங்கிலப் பத்திரிகை, 'தென்னாட்டிலே மக்கள் ஓர் இயக்கத்தைத் தொடங்கினார்கள்; 50 ஆண்டுகளாக அந்த இயக்கம் நடந்தது; ஆனால் அந்த இயக்கம் இன்றையத்தினம் ஒரு பெரிய பூஜ்யமாக ஆகப்போகிறது' என்று எழுதியிருக்கிறது.

நம்முடைய எதிரிக[illegible] எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது: இதைப் படித்தபோது, உண்மையிலேயே வேதனையடைந்தேன்; 'அரை நூற்றாண்டில் உயர்ந்த திராவிட இயக்கம், தொடங்கிய இடத்திற்கே வந்துவிட்டது' என்று எழுதுகிறார்கள்; எவ்வளவு ஆசையோடு எழுதுகிறார்கள் — கவனியுங்கள்; என்ன அப்படி வந்துவிட்டது?

நம்முடைய இயக்கத்திலே, 'தனி மனிதனா — கட்சியா என்கின்றபோது, 'கட்சிதான்' என்ற நிலைமையில் நாம் ஆதரிக்கிறோம்; அதுதானே வேண்டும்?

5-வது ஐந்தாண்டுத் திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது; 6-வது நிதிக் குழு எந்தெந்த மாநிலத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று உட்கார்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறது; இந்த நேரமாகப் பார்த்து இது நடைபெற வேண்டிய அவசியம் என்ன? இதைச் சிந்திக்க வேண்டாமா? இதைச் சொல்வது கூடாதா?

சேலம் இரும்பாலைத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேறி இருக்குமானால் எவ்வளவு நன்மை கிடைத்திருக்கும்? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேறாமல் போனதனாலேதானே இன்னும் நாம் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம்?

செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டிய காலத்திலே செய்யத் தவறினால் என்ன ஆகும் என்பதற்குச் சேலம் இரும்பாலைத் திட்டம் ஓர் எடுத்துக்காட்டு.

இன்றும் சொல்கிறேன்; மின்சாரத்திலே நமக்குத் தட்டுப்பாடு வரவிருக்கிறது; 25 சதவிகிதத்தை ஏற்கனவே வெட்டியிருக்கிறார்கள்; 'நெய்வேலியிலே இரண்டாவது சுரங்கம் வெட்ட தொடங்க வேண்டும்' என்று பொதுக்குழுவிலே தீர்மானம் போட்டிருக்கிறோம்; தீர்மானம் போட்டுவிட்டுத் தமிழ்நாடு அரசைவிட்டு நாம் வெளியேறினால், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வருமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

சி. சுப்பிரமணியம் — மோகன் குமாரமங்கலங்கள்மூலம் நம்முடைய நாட்டிற்கு நன்மை கிடைக்கும் என்று நினைக்கிறார்கள்? இவர்கள் இந்திராவினுடைய புன்சிரிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலே இருக்கின்றவர்களே தவிர, தட்டிக்கேட்பவர்கள் அல்லர்! தட்டிக் கேட்கின்ற இயக்கம் இந்தியாவிலேயே தி. மு. கழகம் ஒன்றுதான்! அதனாலேதான், இயக்கத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும் என்கிறேன்.

அண்ணா அவர்களுடைய வழி நடக்கிறோம் — அண்ணா அவர்களைப் போற்றுகிறோம் — அண்ணா அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம் என்றால், அண்ணா அவர்கள் வளர்த்த இயக்கத்தை — உருவாக்கிய இயக்கத்தை நாம் பாதுகாத்தே ஆக வேண்டும்; அதுதான் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நாம் காட்டுகின்ற நன்றிக் கடனாகும்; அவரது இயக்கத்தை வலுப்படுத்துவதே நமது நன்றிக் கடனாகும்."

கிராமப்புறத் தொழிலாளருக்கு வீட்டு மனைகள்

புதுடில்லி, அக். 27—

தமிழ்நாடு — கேரளம் — மைசூர் — ஒரிசா — உ. பி. ஆகிய மாநிலங்களில், கிராமப் புறங்களில் உள்ள நிலமற்ற தொழிலாளருக்கு 1,56,638 வீட்டு மனைப் பட்டா வழங்கும் புதிய திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ. 397.60 இலட்சம் ஒதுக்கி — அதில் கால் பங்கைக் கொடுத்து விட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 33,692 வீட்டுமனைகளுக்கு ரூ 75 51 இலட்சம் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக்கொள்ள நிதியுதவி எதுவும் அளிக்கப்படமாட்டாது; வீட்டு — மனைக்கான முழுச் செலவை மட்டுமே மத்திய அரசு ஏற்கும்.

மனை பெற்றவர்கள் சொந்தப் பொறுப்பிலோ அல்லது மாநில அரசுகளின் உதவி பெற்றோதான் வீடுகள் கட்டிக்கொள்ள வேண்டும்.

அரிசி — நெல் மொத்த வியாபாரம்

மைசூர் அரசு முடிவு

பெங்களூர், அக். 28—

மைசூர் மாநிலத்தில், அரிசி — நெல் மொத்த வியாபாரத்தை, அரசாங்கமே ஏற்று நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதுபற்றி, மைசூர் முதல்வர் தேவராஜ் அர்சு நிருபர்களிடம் கூறியதாவது:—

"வருகிற அறுவடையின்போது தனிப்பட்ட வியாபாரிகள், அரிசி — நெல் மொத்த வியாபாரம் செய்யத் தடை விதிக்கப்படும்; மொத்த வியாபாரத்தை மாநில அரசே ஏற்று நடத்தும்.

விவசாயி தனது சொந்த தேவைக்கு போக மீதியுள்ள அரிசியை சில்லறை வியாபாரிக்கு விற்கலாம்; பொது மக்களுக்கு நேரடியாக விற்கலாம்; ஆனால், மொத்த வியாபாரியிடம் கொடுக்கக் கூடாது; அப்படிப்பட்ட அரிசியை அரசாங்கமே வாங்கிக் கொள்ளும்.

அந்த அறுவடையின்போது, ஏறத்தாழ 4 இலட்சம் டன் நெல்லை அரசு வாங்கும்.

மொத்த வியாபாரத்தை அரசு ஏற்பதால், அரிசி விலை மேலும் ஏறாமல் தடுக்கப்படும்; வெளி மாநிலங்களுக்கு அரிசி கடத்திச் செல்வதும் நிறுத்தப்படும்."

மின்சார வெட்டு

நடைமுறை விளக்கம்

சென்னை, அக். 27—

தமிழ்நாட்டில், கடந்த 1-ந் தேதி முதல் மின்சாரவெட்டு நடைமுறையில் இருக்கிறது; 'வீடுகளுக்கு மின்சார வெட்டு கிடையாது' என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது; இப்போது அதுபற்றிக் கீழ்க் கண்ட விளக்கங்களை அதிகாரி ஒருவர் கூறினார்:—

வீடுகளைப் பொறுத்தவரையில்' 100 யூனிட் வரையில் மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு மின்சார வெட்டு கிடையாது.

1972 ஜூன் — ஜூலை — ஆகஸ்டு மாதங்களில் சராசரியாக 100 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தியவர்களுக்கு அதிகப்படி 'யூனிட்'டுக்கு 2 மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்; அதாவது, அவர்கள் தற்போது 120 யூனிட் பயன்படுத்தினால், 100 'யூனிட்'க்கு வழக்கமான கட்டணம்; அதிகப்படியான 20 யூனிட்டுக்கு இரண்டு மடங்கு கட்டணம்.

200 'யூனிட்' பயன்படுத்தும் வீடுகளுக்கு 25 சதவீத மின்சாரவெட்டு உண்டு; அதாவது, 150 யூனிட் வரையில் வழக்கமான கட்டணம் வசூலிக்கப்படும்; அதிகப்படியான யூனிட்டுகளுக்கு இரண்டு மடங்கு கட்டணம் வாங்கப்படும்."

உணவுத்துறை அமைச்சர்

ப. நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

அக். 29 காலை; தஞ்சை—கைத்தறித் துணி விற்பனை; மாலை: கும்பகோணம் — கைத்தறி துணி விற்பனை.

அக். 30 காலை 9-மணி: தஞ்சை —பள்ளித் திறப்பு; மாலை 4-மணி; ஆலடிக்குமளை — சீரணி அரங்கம் திறப்பு; மாலை 6-மணி: பட்டுக்கோட்டை.

புத்தம் புதிய திட்டம்— அத்தனையும் உங்களுக்கே!



1972 அக்டோபர் முதல் அளிக்கப்படும் பரிசுகளில் பரபரப்பூட்டும் மாறுதல்கள்

மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தொகையும்:

3	முதல் பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 1,00,000	=	ரூ. 3,00,000
6	இரண்டாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 10,000	=	ரூ. 60,000
225	மூன்றாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 1,000	=	ரூ. 2,25,000
300	நான்காவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 500	=	ரூ. 1,50,000
1500	ஐந்தாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 100	=	ரூ. 1,50,000
3000	ஆறாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ. 50	=	ரூ. 1,50,000

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

முதல் பரிசுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 1500/- வீதம் 6 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 9000/-
இரண்டாவது பரிசுகளுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 500/- வீதம் 12 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 6000/-

மொத்தப் பரிசுகள்: 5052

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,50,000

குலுக்கல் நாள்: 10—11—1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

இன்றே வாங்குங்கள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2



★ 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

நகர்ப்புறச் சொத்து வரம்பு

ரூ. 5 இலட்சம் என நிர்ணயிக்கச் சட்டம்

10,000 பேர் பாதிக்கப்படலாம்

புதுடில்லி, அக் 27—

"நகரங்களில் வசிக்கும் ஒரு குடும்பத்தினர் ரூ. 5 இலட்சத்திற்குமேல் சேர்த்து வைத்திருக்கக் கூடாது" என்று வரம்பு விதிக்கும் மசோதாவை, நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் மசோதா கொண்டுவரப்படக் கூடும்.

மாநில அரசுகள் ஏற்கனவே இதற்கும் குறைந்த அளவில் உச்ச வரம்பு நிர்ணயம் செய்திருந்தால், அது, மத்திய அரசின் சட்டத்தைப் பாதிக்காது.

"நகர்ப்புறச் சொத்து வரம்புக்குக் குடும்பம் என்பதன் விளக்கம் விவசாய நிலவரம்பைப் போலவே (கணவன் — மனைவி — 3 மைனர் குழந்தைகள், இருக்கவேண்டும்" என்று நகர்ப்புறச் சொத்து வரம்பு நிர்ணயம் பற்றிய குழு பரிந்துரைத்திருக்கிறது.

ரூ. 5 இலட்சம் வரம்பு விதித்தால், சுமார் 10,000 பேர் பாதிக்கப்படக் கூடுமாம்.

'எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுத்தது சரியானதே'

சென்னை மாநகராட்சி தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம்

பொதுக் குழு முடிவுகளுக்கு வரவேற்பு

சென்னை, அக். 26—

சென்னை மாநகராட்சி தி.மு.க. கட்சிக் கூட்டம், அண்ணா சாலையிலுள்ள தி. மு. கழகக் கட்சி அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்துக்கு மாநகராட்சி தி.மு. கழகத் தலைவர் வி. முனுசாமி தலைமைதாங்கினார்.

தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

மாநகராட்சி தி. மு. கழக உறுப்பினர்கள் 64 பேரில் 61 பேர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்; மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் மாநகராட்சி உறுப்பினர்கள் கோவிந்தராசன், இரா. காசிச்சாமி ஆகிய இருவரும் கூட்டத்துக்கு வர இயலாமையைத் தெரிவித்து — தீர்மானத்துக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டு அனுப்பினர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானத்தை வி. முனுசாமி கொண்டு வந்தார்:—

"கழகப் பொருளாளர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்மீது கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி கழகப் பொதுச் செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கையினைத் தலைமைச் செயற்குழுவும் — பொதுக்குழுவும் முழுமனதுடன் வரவேற்றுள்ளதை, சென்னை மாநகராட்சியின் கழக உறுப்பினர்களாகிய நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம் என்பதனை இதன்மூலம் கழகத் தலைவர் அவர்கட்குத் தெரிவித்துக்கொள்கிறோம்."

இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத் துவக்கத்தில் வி. முனுசாமி வரவேற்றுப் பேசினார்; 'கழகத்தின் கட்டுப்பாடு — ஒழுங்கு முறைகள் கட்டிக் காக்கப்பட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

என்.வி. நடராசன் வலியுறுத்தல்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கூட்டத்தில் பேசுகையில், கழகத்தின் கட்டுப்பாடு காக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் — கழகத்தின் கண்ணியத்தைக் குலைப்போர் எவராயிருப்பினும் அவர்கள் கழகத்தின் எதிரிகளாகக் கருதப்பட வேண்டியவர்களே என்றும் — கட்சிக்குப் புறம்பாக இரண்டொரு தனி மனிதர்கள் சில நாட்களாகச் செய்துவரும் அவதூறுப் பிரசாரங்களின் உள்நோக்கத்தை விளக்கியும் — அறிஞர் அண்ணா அவர்களின் வழி நிற்பவர்களாகச் சொல்லிக்கொள்வதற்கு அருகதை படைத்தவர்கள் கலைஞர், நாவலர் தலைமையிலான கழகத் தோழர்களுக்கே உண்டு என்பதை விளக்கியதுடன், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கழகத்தின் முடிவுகளை நிறைவேற்றுவதிலும், கட்டுப்பாடு — கண்ணியத்தைக் காப்பதிலும் முன்னணியில் நிற்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மைனர் மோசஸ் நன்றி கூறினார்.

சென்னை, அக். 28—

சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காட்டில் இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்டப்பட்டிருக்கிறது; இந்த விடுதியை ஆளுநர் கே. கே. ஷா அக். 30-ம் நாள் திறந்து வைப்பார்.

'அண்ணா கண்ட கழகமே நமது உயிர் மூச்சு'

'அதனைக் கட்டிக் காக்க இறுதி மூச்சுவரை அயராது உழைப்பேன்'

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அறிவிப்பு

சென்னை, அக். 28—

"யார் என்ன சொன்னாலும் -- தி. மு. கழகத்தை அழித்திட முனைந்திட்டாலும், அதைத் தடுத்து நிறுத்திடும் முயற்சியில் தோள்கொடுத்துக் கழகத்தை உயர்த்தும் இலட்சக்கணக்கான தொண்டர்களில் ஒருவனாக முன்னணியில் நிற்பேன்"

என்று இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் உறுதி கூறியிருக்கிறார்; இதன் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது :—

"தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்தும் எனது ஆருயிர் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பலர் -- தற்போதைய சூழ்நிலையில் -- என்னுடைய நிலை என்ன என்பதைக் கேள்விக் குறியாக எழுப்பி, எனக்குக் கடிதங்கள் எழுதி வருகின்றனர்.

அவர்களுக்கு அன்போடு சொல்லிக் கொள்கிறேன் -- 'பேரறிஞர் அண்ணா உருவாக்கிய -- கலைஞர் வழிநடத்திச் செல்லும் தி. மு. கழகம்தான் எனது பாசறையாகும்' என்று.

அண்மையில் எனது பம்பாய் சுற்றுப்பயணத்திலும், அதற்கு முன் பொதுக் குழுவிலும் உறுதியாக இதனை அறிவித்திருக்கிறேன்.

யார் என்ன சொன்னாலும் -- கழகத்தை அழித்திட முனைந்திட்டாலும் -- அதைத் தடுத்து நிறுத்தத் தோள் கொடுத்துக் கழகத்தை உயர்த்தும் இலட்சக்கணக்கான தொண்டர்களில் ஒருவனாக முன்னணியில் நிற்பேன்.

கழகத் தோழர்களே -- உங்களைப் போலவே கழகத்தைக் கட்டிக் காத்திடத் தொல்லைகள் பல ஏற்றவன் நான்; நேருவுக்குக் கறுப்புக் கொடி நிகழ்ச்சியின் போதும், விலைவாசி மறியல் போராட்டம் -- இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் உங்களுடன் சிறை சென்றவன் நான்!

எந்தக் கழகத்தைக் காக்கக் குருதி சிந்தினோமோ -- எந்த அண்ணாவின் கொள்கைகளை இதயத்தில் ஏற்று வாழ்க்கை சுகத்தை மறந்தோமோ -- அதற்காக எனது இறுதி மூச்சு உள்ளவரையில் அயராது பாடுபடுவேன்.

விரைவில் தமிழகம் எங்கும் உங்களைச் சந்திக்க வருவேன்; கழகத்தை மேலும் மேலும் வளர்க்கும் பணியில் ஈடுபடுவேன்.

நமது ஒரே கழகம் -- அண்ணா கண்ட தி. மு. கழகம்; நமது ஒரே உயிர் மூச்சு -- ஆருயிர் சகோதரர் கலைஞர் நடத்திச் செல்லும் தி. மு. கழகம்.

எனக்குக் கடிதங்கள் எழுதிய தோழர்களுக்கு இந்த அறிக்கையை அர்ப்பணிக்கிறேன்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

29--10--72

மாயூரம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6.30 மணிக்கு துலாக் கட்டத்தில்; தலைவர்: ஆர். முனிச்சாமி; பேசுவோர்: செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., என். கிட்டப்பா எம்.எல்.ஏ., சி. கிருஷ்ணமூர்த்தி, இரா. ஜோசப், அ. செங்குட்டுவன், எஸ். என். குருமூர்த்தி, கே. நாராயணசாமி, கே. எஸ். சண்முகம், ஆர். நாராயணசாமி. (காலை 10 மணிக்கு கைத்தறித் துணி விற்பனை.)

சென்னை 9-வது வட்டத்தில் பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்

★

30-10-72 மாலை 7-மணிக்கு
இராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டையில்

தலைவர் :
வி. எஸ். ஆனந்தன் எம்.சி.

பேசுவோர் :
அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
நா. வீராசாமி எம்.எல்.ஏ,
நீலநாராயணன் எம்.எல்.சி.
மு. வேதாசலம் எம்.எல்.ஏ.
அ. செல்வராசன்
ஆர். டி. சீதாபதி
பி. ஏ. என். இராசரத்தினம்
ஆ. ஜோசப்
மற்றும் பகுதிப் பிரதிநிதிகள் -- துணை மன்றச் செயலாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]
இதழ் வெளியிடப்படுகிறது.

வண்ணைப் பகுதியில் கைத்தறித் துணிகள் விற்பனை

"சென்னை — வண்ணைப் பகுதி 8-வது வட்டம் மன்னார்சாமி கோயில் தெருவில், 29—10—72 காலை 10.30 மணியளவில், அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் -- கழக முன்னணியினரும் கைத்தறித் துணி விற்பனை செய்வார்கள்; அவர்களுடன் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் மு. வேதாசலம் மற்றும் மாநகராட்சி உறுப்பினர்களும் -- கிளைக் கழகச் செயலாளர்களும் -- வகுதிப் பிரதிநிதிகளும் -- கழகச் செயல் வீரர்களும் கலந்துகொள்வர்; பகுதி மக்கள் அனைவரும் கைத்தறித் துணிகளை அதிக அளவில் வாங்கி -- கைத்தறி நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைக்க உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்"

என்று, பகுதிச் செயலாளர் பி.ஏ.என். இராசரத்தினம் அறிவிக்கிறார்.

கடலூர் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

"கடலூர் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் [illegible]ட்டம், 30—10—72 காலை 8 மணியளவில் பண்ணுருட்டி [illegible]னசுவரி திரையரங்கில் [illegible]றும்; அதுபோது வட்ட உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி கேட்டுக்கொள்கிறார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாம் வளர்த்த கழகத்துக்குத் தாமே இழிவையும், பழியையும் தேடித் தருகிறார்கள் என்பது தான் பொருள்.

துவக்கம் முதல் தூற்றல்களையும் -- தொல்லைகளையும், இழிமொழிகளையும் -- பழிச் சொற்களையும் தாங்கிக்கொண்டவர்கள், திருப்பி அதே முறையில் நடந்திடாமல், 'கண்ணியத்தோடு காரியமாற்றிக் கழகத்தை வளர்த்துவருபவர்கள்' என்ற நற்பெயர், நமக்கு உயிருட்டம் தந்துவந்திருக்கிறது என்பதை எவரும் மறந்திடலாகாது!

இன்றைய நிலையிலும், நம்மீது வீசப்படும் ஏச்சும் பேச்சும் பழைய குப்பைகளின் மறுபதிப்பு -- மலிவுப் பதிப்பு என்பதன்றி வேறில்லை; முன்பு வீசப்பட்டவைகளாலே நாம் எப்படித் துளியும் பாதிக்கப்படாமல் இன்றைய எழில் வடிவம் பெற்றுத் திகழ்கிறோமோ -- அதே போலத்தான் இப்போது நமது கழகத்தின்மீது வீசப்படும் இழிமொழிகளும், நமது கழகத்தை இம்மி அளவும் பாதிக்காது -- வளர்ச்சியைத் தடுக்காது -- வெற்றியைப் பறித்துக்கொள்ளாது.

இந்தத் திடநம்பிக்கை உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்க வேண்டும்; இருந்திடின், அமைதியான முறையில் -- எவரும் அருவருக்காத தன்மையில் ஆர்வத்தோடு பணியாற்றி, வெற்றி பெற்றளிக்க முடியும்.

கழகத்துக்கு எத்தனை புதிய உறுப்பினர்களைச் சேர்த்தோம் -- புதிய கிளைகள் அமைத்தோம் என்ற கணக்குத்தான், நீங்கள் பெற்றளித்துப் பெருமையும் பெருமகிழ்ச்சியும் பெற வேண்டியதாகுமேயன்றி, வீசிய கற்கள் -- செருப்புகள் என்று மாற்றார் காட்டும் கணக்கு நமக்குத் தலை இறக்கத்தைத்தான் தரத்தக்கதாகும் என்பதை உணர வேண்டும்.

பொறுப்புள்ள எவரும் அத்தகைய செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்பது உண்மைதான் என்றாலும், பொறுப்புள்ள எவரும் அத்தகைய சிறு செயலில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து தடுத்திட -- கண்டித்திட -- களைந்திட முற்படுவதைத் தமது கடமை என்று கொண்டாக வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

கைகூப்பி -- காலில் விழுந்தாகிலும், காலித்தனம் செய்வோரை, 'இந்தச் சிறு செயலில் ஈடுபடாதீர்கள்; செம்மையாக வளர்ந்துவரும் தி. மு. கழகத்துக்கு இழுக்குத் தேடாதீர்கள்' என்று வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய செயலில் ஈடுபடுவோரைத் தி. மு. கழகம் நிச்சயமாக உறுப்பினராகக் கொள்ளாது!

அத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை 'என் தோழர்கள்' என்று நான் எப்படிக் கூறிக்கொள்ள முடியும்?

அத்தகைய செயலில் ஈடுபடுவோரை, 'பொது நலத் தொண்டர்கள்' என்று எவர்தான் ஏற்றுக்கொள்வார்?

எனவே, காரணம் ஆயிரம் காட்டமுடியும்; எனினும், எவரும் எந்தவிதமான காலித்தனத்திலும் ஈடுபடுவது ஆகாது; அதுதான் அவர்தம் முறை -- அவ்வளவுதான் அவர்தம் திறன் -- அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு என்னிடம் உள்ள பற்று -- நம்பிக்கை -- அன்பு என்றால், அப்படிப்பட்டவர்கள் கழகத்தில் இருப்பதை, நான் என் இதயத்தில் எறியப்படும் ஈட்டி என எண்ணாமல், வேறு எப்படிக் கருதமுடியும்?

கல்லோ, சுடுசொல்லோ -- செருப்போ, மறும்போ -- எதனை எவர் வீசினாலும், அவை என்மீது வீசப்பட்டதாகவே நான் கொள்கிறேன்; எனக்கு, கேவலத்தைக் கஷ்டப்பட்டுத் தேடிக்கொடுக்கும் சிறுமைச் செயலாகவே அதனைக் கருதுகிறேன்.

எனவே இறைஞ்சுகிறேன் -- கோபம், கொந்தளிப்பு, அருவருப்பு, மனக்கசப்பு அகற்றுமின்! இழிசெயலில் ஈடுபடாது கழகத்தின் ஏற்றம் வளர உழைத்திடுமின்!

குறை அறிவு காரணமாகவோ, ஆத்திர உணர்ச்சி காரணமாகவோ எவர் அத்தகைய செயலில் ஈடுபடக் காணினும், உடனடியாக அவர்தம் தாள் பற்றி வேண்டித் தடுத்திடுமின்! மறுப்பரேல், கழகத்தைவிட்டு விலகிவிடக் கட்டளையிட வேண்டுகிறேன்.

மிகப் பெரிய எதிர்காலம் நம்மை அழைக்கிறது; அருமைமிகு அமைப்புக்கு நாம் உரிமையாளர்கள்! 'அரும்பணியாற்றுவோர்' எனும் புகழாரம் கொண்டுள்ளோம்; வந்த எதிர்ப்புகளெல்லாம் மண்ணாகிப் போய்விட்டன; இன்று இருப்பது, 'எதிர்ப்பு' என்றுகூடக் கூறத்தக்க நிலையோ -- தரமோ கொண்டது அல்ல; இந்நிலையில் அல்லவோ நாம் அமைதியும் -- அடக்கமும் -- பொறுப்புணர்ச்சியும் கொண்டோராக நடந்துகொள்ள வேண்டும்."

உறவு நீடிக்கும்-எவ்விதச் சந்தேகமும் வேண்டாம்

உத்தமர்கள் காட்டிய வழியைப் பின்பற்றுவதே நம் கொள்கை

தி. மு. க. -- முஸ்லிம் லீக் தோழமை பற்றி தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் அறிக்கை

திருச்சி அக். 28—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முஸ்லிம் லீகுக்குமிடையே உள்ள உறவு நீடிக்கும்; இதைப்பற்றி எந்த விதச் சந்தேகமும் வேண்டியதில்லை"

என்று, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டுக் கிளையின் தலைவர் கே. எஸ். அப்துல் வஹாப் எம்.எல்.சி. அறிவித்திருக்கிறார்; இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது :—

'நம்முடைய தோழமைக் கட்சியாகிய தி. மு. கழகத்தில் உருவாகியிருக்கும் விவகாரம் வருந்தத்தக்கது; அந்தக் கட்சியில் ஏற்பட்டுள்ள தகராறை நாம் விமர்சிப்பது முறையல்ல; எனினும், போகுமிடமெல்லாம், 'உங்கள் நிலை என்ன' என்று நேரிலும் -- அஞ்சல்மூலமும் கேட்கிறார்கள்; நான் நிலைமையைத் தெளிவுபடுத்துவது அவசியம் என உணருகிறேன்.

முஸ்லிம் லீகுக்கும் -- தி. மு. க. வுக்கும் 1962-ம் ஆண்டில் ஏற்பட்ட தேர்தல் ஒப்பந்தத்தில், மறைந்த உத்தமர்களான கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களும் -- பேரறிஞர் அண்ணா அவர்களும் கையெழுத்திட்டார்கள்; அந்தத் தோழமை இன்று வரையில் சுமுகமாகத் தொடர்ந்து வந்திருக்கிறது.

'நம் தலைவர்கள் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றுவது தான் நம் கொள்கையாகும்.

முஸ்லிம் லீகுக்கும் -- தி. மு. க வுக்கும் உள்ள உடன்பாட்டை மறுபரிசிலனை செய்யவேண்டிய எந்த அவசியமும் நமக்கு ஏற்படவில்லை; தோழமை எப்போதும்போல் வருங்காலத்திலும் தொடரும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இது சம்பந்தமாக முஸ்லிம் லீகின் மாநிலச் செயற்குழு நவம்பர் 11-ம் நாளன்று திருச்சியில் கூடுகிறது; அப்பொழுது பிரச்சினையை விரிவாகப் பரிசீலித்து விளக்கமான அறிக்கையை வெளியிடும்."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் -- மத்திய அரசுக்குமிடை பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளப் புதிய சட்டம் வகை செய்யும்; இச்சட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுப்பதில் இரண்டு துறைகளுன் அதிகாரிகளும் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 29 : காஞ்சிபுரம் — கைத்தறி துணி விற்பனை துவக்கவிழா.

அக். 31 : பிற்பகல் 1-மணி : விருத்தாசலம்; மாலை 4.30 மணி : திட்டக்குடி அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-30 மணி : வசிஷ்டபுரம்—மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி திறத்தல்; 6-மணி : தர்மகுடிக்காடு—மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி திறப்பு; இரவு 7-மணி : திட்டக்குடி பேருராட்சி-பொதுமக்கள் வரவேற்பு.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

அக். 29 : ஆரணி—கைத்தறித் துணி விற்பனை விழாவில் கலந்து கொள்ளல்; மாலை 5 மணி : வேலூர்—கைத்தறித் துணி விற்பனை விழாவில் கலந்துகொள்ளல்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

அக். 29 மாலை 10 மணி: மேலூர்—கைத்தறித் துணி விற்பனை விழாவில் கலந்துகொள்ளல்; மாலை: திண்டுக்கல்—கைத்தறித் துணி விற்பனை விழாவில் கலந்து கொள்ளல்.

அக். 30 : சேலம்.

அக். 31 : பெங்களூர்—தென் பகுதி மின்சாரப் பிரச்சினை பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ளல்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 29 காலை 10 மணி : பொள்ளாச்சி—கைத்தறித் துணி விற்பனை; மாலை 4 மணி : உடுமலை—கைத்தறித் துணி விற்பனை.